www.tamilarangam.net

# கருநாடகத் தமிழர் இயக்கம்




## கொள்கைத் திட்டமும் நோக்கங்களும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# கருநாடகத் தமிழர் இயக்கம்

## (தமிழினப் பாதுகாப்புக் குழு)

பெங்களூர்

1. மொழி, இன, பண்பாடு, வாழ்வியல் அடிப்படையில் நின்று நீடித்து வாழ்ந்து வரும் தொன்மையான இனம் தமிழினம்.

2. இன்றைய உலக உறவு கொண்ட சூழலில் தமிழர்கள் பல்வேறு நாடுகளில் பரவியும், விரவியும் வாழ்ந்து வருகின்றனர். இப்படியுள்ள தமிழர்க்குத் தாயகங்களாகத் *தமிழ்நாடு, தமிழீழம்* போன்ற நாடுகளும், 1956-இல் மொழிவழி மாநிலங்கள் என அமைக்கப்பட்டபோது இன்றைய தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களோடு [கருநாடகம், ஆந்திரம், கேரளம்] இணைக்கப்பட்டுவிட்ட எல்லையோரத் தமிழர்ப் பகுதிகளும் இருந்து வருகின்றன. மேற்கண்ட மாநிலங்களோடு வலிந்து சூழ்ச்சியால் சேர்க்கப்பட்டுவிட்ட தமிழர்கள் இன்று தனி வகையான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

3. குறிப்பாகக் கருநாடகத்தில் பெங்களூர், கோலார் தங்கவயல் உட்பட பல்வேறு மாவட்டங்களில் வாழும் 100 இலக்கம் தமிழர்கள் இன்று பெரும் வாழ்வியல் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர். கருநாடகத்தின் வளர்ச்சியில் அனைத்துத் துறைகளிலும் கருத்தாலும், கடுமையான உழைப்பாலும் பங்களித்து வளம் சேர்த்துவரும் தமிழர்கள் கடந்த 30 ஆண்டுகளாகப் பெரும் அச்சுறுத்தலுக்கும், வன்முறைத் தாக்குதலுக்கும் உள்ளாகி வருகின்றனர். மேலோட்டத்திற்கு ஒருவகை அமைதி தோன்றினாலும் தமிழர்கள் தமது எதிர்காலம் குறித்துக் கவலை கொண்டும், எரிமலையாகக் குமுறிக் கொண்டுமே இருக்கின்றனர். இன்று இத் தமிழர்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட சூழலில் நாலாந்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுகின்றனர். தமிழர்கள் தமது மொழி மற்றும் பண்பாட்டு அடையாளங்களின் காரணமாகவே தனிவகைப்பட்ட அடக்குமுறைகளுக்கு - வன்முறைத் தாக்குதல்களுக்கு - இழிநிலைக்கு [அவமானம்] உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

4. தமிழர்கள் தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக வாழ்ந்துவரும் பெங்களூர், கோலார் தங்கவயல் போன்ற தமிழர்ப்பகுதிகள்

www.tamilarangam.net

1956–இல் கருநாடகத்துடன் இணைக்கப்பட்டபோது அத் தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளும், கோரிக்கைகளும் காப்பாற்றப்படும் – நிறைவேற்றப்படும் என்று ***சிறுபான்மையர் ஆணையத்தால்*** அரசியல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டதின் அடிப்படையில் தான் அவ்விணைப்பு நடந்தேறியது. ஆயின், இன்று கருநாடகத்தில் ஒரு தேசியச் சிறுபான்மையினராகவும், மொழிச் சிறுபான்மையினராகவும் வாழ்ந்துவரும் இந்த 100 இலக்கம் தமிழர்களின் அடிப்படை குடியாட்சி உரிமைகளும், வாழ்வுரிமைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. அஃதாவது, தாய்மொழிக்கல்வி உரிமையும், வேலை வாய்ப்பு உரிமையும், வழிபாட்டு மற்றும் பண்பாட்டு உரிமைகளும் நேரடியாகவே மறுக்கப்படுகின்றன. கருநாடகத்தின் அரசு அதிகார அமைப்புகளும், காவல் துறையும் ஒளிவு மறைவற்றத் தமிழர் எதிர்ப்பு நிலையெடுத்து இயங்கி வருகின்றன.

5. கன்னட நல இயக்கங்களாகவும், அமைப்புகளாகவும் தங்களை அடையாளப் படுத்திக் கொண்டுள்ள சனநாயக அமைப்புகளைத் தவிர்த்துச் சில கன்னட மொழி, இனவெறி அமைப்புகள் தமிழர்களைத் தாக்குவதையும், விரட்டியடிப்பதையுமே தங்களின் தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. தொழிற்சாலைகளிலும், குடியிருப்புகளிலும், குடிசைப் பகுதிகளிலும் பகையுணர்வு ஊட்டப்பட்ட இவர்கள் தமிழர் எதிர்ப்பு அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் வமைப்புகளில் தெலுங்கர்களில் ஒரு பிரிவினர் தம்மைக் கன்னடர்கள் போன்று அடையாளங் காட்டிக் கொண்டு முனைப்பான தமிழரெதிர்ப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதும் கவனத்திற்குரியதாகும்.

6. தமிழர்கள் வாழக்கூடிய பகுதிகள் பலவும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் குறைந்த அளவு வாழ்க்கையேந்துகள் கூட இல்லாத நகர்ப்புறச் சேரிகளான குடிசைப் பகுதிகளில் பெரும்பான்மைத் தமிழர்கள் வாழும்படியாக நெருக்கப் பட்டுள்ளனர். குடிநீர், சாலை, வடிநீர், கழிப்பிடம், மின்சாரம் போன்ற ஏந்துகள் இன்றியும், பள்ளிகளில் அடிப்படையேந்துகள் இன்றியும், அடிப்படை மருத்துவ ஏந்துகளற்ற நிலையிலும், குப்பை மேடுகள் சூழத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

www.tamilarangam.net

7. இப்படி மாந்தர்கள் வாழத் தரமற்றச் சூழலில் வாழும்படியாக நெருக்கப் [கட்டாயப் படுத்தப்] பட்டிருக்கும் நம் குடிசைப் பகுதித் தமிழர்களை அப்புறப்படுத்த கருநாடக அரசு வஞ்சனையாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறது. *நகரங்களை அழகுபடுத்துதல்* என்ற பெயரில் நில முதலைகளின் வளர்ச்சித் திட்டங்களுக்காக இக்குடிசைப் பகுதிகளும் இடிக்கப்பட்டு இத் தமிழ் மக்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர். பெரும்பாலும், அமைப்பாக்கப்படாத கூலித்தொழிலாளர்களாக வேலைக் காப்புறுதியும், பாதுகாப்பும் அற்றச் சூழலில் வேலை செய்து வரும் இந்தக் குடிசை வாழ் மக்கள் தான் ஒவ்வொரு முறையும் மொழி, இனக் கலவரங்களின் போது பெரும் உயிரிழப்புகளுக்கும், உடைமையிழப்புகளுக்கும் உள்ளாகின்றனர். சில பகுதிகளில் தமிழ்ச்சிறு பெரு-முதலாளிகளும் கூட தத்தம் தொழிலக உடைமை இழப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

8. 1981-ஆம் ஆண்டு கருநாடக பாடத்திட்டத்தில் சமற்கிருதத்தின் நிலை குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட *''திரு வி.கே. கோகாக் கமிட்டியின்''* பரிந்துரைகள், கருநாடகத்தின் அனைத்து மொழிச் சிறுபான்மையினரும், தத்தம் *தாய்மொழி வழிக் கல்வி* பெறும் வாய்ப்பினைக் குழிதோண்டிப் புதைத்தது. *கன்னடம் மட்டுமே* முதல் பாடமாக அறிவிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்துக் கருநாடகத் தமிழர் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டத்தில் கோலார் தங்கவயலில் *நால்வரும்,* பெங்களூரில் *இருவருமாகக்* கருநாடக அரசின் துமுக்கிக் குண்டிற்குத் தங்கள் இன்னுயிரை ஈந்தனர்.

9. கருநாடகத்தில் ''15 ஆண்டுக் காலம் வாழ்ந்தவர் கருநாடகத்தவரே ஆவர்'' எனவும் ''ஆகக் கருநாடகத்தவர்க்கே 80% வேலை வாய்ப்புகள் தரவேண்டும்'' எனவும் பரிந்துரைத்த *சரோசினி மகிசி* அறிக்கையை நடைமுறைப் படுத்தும்போது, தமிழர்களைத் திட்டமிட்டு வஞ்சிக்கும் - புறக்கணிக்கும் போக்கே நிலவி வருகிறது. அதோடு, ஒரு சில அரசு அலுவலகங்களிலும், தொழிலகங்களிலும் தமிழர்களுக்கு முறைப்படி கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகளையும் சூழ்ச்சி செய்து பறித்துக் கொள்கின்றனர்.

10. தமிழ்க் கத்தோலிக்க கிறித்தவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே வழிபாடு நடத்தி வருகின்றனர். இதற்குக் கன்னடவெறி அமைப்புகள் பல ஆண்டுகளாகக் கடும் எதிர்ப்பைக் காட்டி

www.tamilarangam.net

வருகின்றன. இவர்களை அரசும் ஆதரிக்கின்றது. ஆனால், அண்மைக் காலமாகக் கன்னட கிறித்தவர்களும் கன்னட வெறியர்களின் துணையோடு தமிழர்களின் வழிபாட்டு உரிமைகளில் தலையிடுவதும், தாக்குவதும், கையகப்படுத்திக் கொள்வதுமான அடாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்குக் காவல்துறையினரும் உடந்தையாக இருந்து வருவது நாமறிந்தது தான்.

11. தமிழர்களின் பண்பாட்டுக் குறியீடாகவும், வேட்கையாகவும் உள்ள திருவள்ளுவர் சிலையைத் திறக்க விடாமல் கன்னட வெறியர்கள் தடுத்து வருகின்றனர். காலங் காலமாக இந்தியாவையும், கருநாடகத்தையும் அடிமைப்படுத்திய வெள்ளையர் பலருக்கும், சீமாட்டி விக்டோரியா அரசிக்கும் இங்குச் சிலை வைத்ததைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்கள் இன்று திருவள்ளுவர் சிலைத் திறப்பை மட்டும் எதிர்ப்பது என்பதே அவர்களுக்குள் உறைந்து போயுள்ள தமிழர்க்கெதிரான இனவெறியைத் தான் காட்டுகிறது.

12. மேற்சொன்ன எல்லாக் கொடுமைகளையும் விஞ்சும் வண்ணம், கருநாடகத் தமிழர்கள் மீது 1991–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13–ஆம் நாள் வரலாறு காணாத வகையில் கன்னட இனவெறியர்களால் கொலைவெறித் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது. முன்கூட்டியே திட்டமிட்டுக் கருநாடகக் காவல்துறையும், அரசியல் காடையர்களும் நடத்திய இந்தத் தமிழர் எதிர்ப்பு வன்முறைத் தாக்குதலால் ஏதுமறியாத் தமிழ் மக்கள் வேரறுந்த மரங்களாகச் சாய்க்கப்பட்டனர். காவிரி நீர்ச் சிக்கலில், கருநாடகத் தமிழர்கள் தாக்கப்படுவதற்கான எந்த ஞாயமும் இல்லை. *“காவிரி நீரைத் தமிழ்நாட்டிற்குக் கொடு”* என்றோ, அல்லது *“காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்து”* என்றோ தமிழர்கள் குரல் கொடுக்கவும் இல்லை; முழக்கமிட்டுப் பேரணி நடத்தவும் இல்லை. ஆனாலும், தமிழர்களின் குடிசைகள், தொழிலகங்கள், வண்டிகள், கடைகள், வீடுகள் என அனைத்துமாகத் தீயிட்டும், தீயிலிட்டும் கொளுத்தப்பட்டன. பெண்கள் மீது பாலியல் வன்முறைகளும், கொடுமைகளும் இன்ன பிறவும் ஏவி விடப்பட்டன. பச்சிளங் குழந்தைகள் என்றும் பாராமல், தமிழ்க் குழந்தைகளைத் தீயிலிட்டுப் பொசுக்கினர். கொள்ளேகால், மைசூர், மண்டியா, இரியூர் போன்ற பகுதிகளிலும் தமிழர்கள், கன்னட இனவெறியர்களின்

www.tamilarangam.net

தாக்குதலுக்குப் பலியானார்கள். அவர்தம் உடைமைகள் சூறையாடப்பட்டன. இரண்டு இலக்கத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் ஏதிலியராக [அகதி] வெளியேறினர். தமிழர்களின் உடைமை-சொத்துக்களின் இழப்பு என்பது 20,000 கோடியைத் தாண்டும். தமிழர்களை எதிர்த்து இவ்வாறு தொடுக்கப்பட்ட இந்த ஒருமுகப் போர், கருநாடகத் தமிழர்களின் எதிர்காலம் குறித்து நாம் உடனடியாக மேற்கொள்ளவேண்டிய அரசியல் எதிர்வினைகள் குறித்துச் சிந்திக்கவும், அவற்றைச் செயலாற்றவுமாக நம்மை நெருக்கியது.

13. கருநாடகத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் தமிழர்கள் மீது இது போன்ற தாக்குதலை நடத்தும் கன்னட வெறி அமைப்புகள், கன்னட தேசிய இனத்தின் அனைத்து வளங்களையும் உண்மையில் கொள்ளையடித்துச் சுரண்டிக் கொழுக்கும் மார்வாடி, பனியா, சிந்தி, தெலுங்கு போன்ற பணமுதலைகளுடனும், முழுவுரிமைத் துய்ப்பு [ஏகபோக] முதலாளிகளுடனும், வணிகர்களுடனும், பன்னாட்டு நிறுவனங்களுடனும் கொஞ்சிக் குலாவுகின்றன. உலக வல்லரசியத்தின் வஞ்சனை [சதி] களுக்குத் தலைவணங்கிக் கருநாடக அரசும், இந்திய அரசும் நடைமுறைப் படுத்தும் புதிய பொருளாதாரக் கொள்[கை]ளையாலும், தாராள மயமாக்கல் - உலகமயமாக்கல் போன்ற கொள்கைகளாலும் அனைத்துத் தேசிய இனமக்களும் ஓட்டாண்டி ஆகிக் கொண்டிருப்பதைப் பற்றிக் கவலை கொள்ள இவர்கள் யாரும் அணியமாய் இல்லை. பன்னாட்டு நிறுவனங்கள், கருநாடகத்தின் சுற்றுப் புறச் சூழலை அழித்தொழித்து நஞ்சூட்டிச் சூறையாடினும் அதைப் பற்றி அக்கறை கொள்ளவோ, எதிர்த்துப் போராடவோ மேற்கண்ட இவர்கள் யாரும் முன்வராமலிருக்கின்றனர்.

14. கருநாடக அரசியல் கட்சிகளின் பொழுதமைவிய [சந்தர்ப்பவாத] அரசியலாலும், மக்கள் நலனுக்கு எதிரான பொருளாதாரக் கொள்கையாலும், நாளும் பொழுதும் பேய்த்தன வேகத்துடன் விரிவு கொள்ளும் நகர வளர்ச்சியாலும், பன்னாட்டுக் குழுமங்கள் [கம்பெனி], நிறுவனங்கள் போன்றவை படையெடுத்து வந்து இங்கே நிலம் வாங்கிக் குவித்தலாலும், புதின [நவீன] மயமாக்கப்படும் தொழிற்சாலைகளாலும் - இவற்றால் கருநாடக மக்களின் அடிப்படை ஏந்துகளின் பற்றாக்குறை, வேலையில்லாத் திண்டாட்டம், குடிநீர், உணவு, குடியிருப்பு ஆகியவற்றின்

www.tamilarangam.net

பற்றாக்குறை, இட நெருக்கடிகள் போன்றவற்றாலும், திரைப்படத்துறை - வணிகப் போட்டிகளாலும் தங்களின் எதிரிகளையும், நண்பர்களையும் இனங்காணத் தவறித் தடம் புரண்ட கன்னட வெறிக் கட்சிகள் மற்றும் அமைப்புகள், இவை போன்ற இன்ன பிறவும் இன்று கன்னடர் - தமிழர் உறவை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

15. இந்தச் சூழலில், கடந்த 30 ஆண்டுகளாக மிக விரைவாகப் பரவியும், பரப்பப் பட்டும் வரும் தமிழர் எதிர்ப்பு மனநிலையும், அரசியல் ஆற்றல்களின் வஞ்சனை[சதி]களும், வன்முறைத் தாக்குதல்கள் - உரிமை மீறல்கள் போன்றவையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இக் கொடிய போக்கினால், கருநாடகத் தமிழர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், தங்களின் வாழ்வுரிமைகளை மீட்டமைத்துக் கொள்ளவும் ஒரு வலுவான அமைப்பாக - ஆற்றலாக அணிதிரளவும், ஒரு சரியான அரசியல் இயக்கத்தைக் கட்டியமைத்து முனைப்புடன் செயற்பட வேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டாயம் உருவாகியுள்ளது.

16. ஆனால், இன்றுவரை கருநாடகத் தமிழர்களின் வாழ்வுரிமையை - இனவுரிமையை மீட்க எந்த வகையான ஆக்கமான முயற்சிகளும் நடந்தேறவில்லை. இதில் அனைத்திந்தியக் கட்சிகளும் சரி, தமிழகத்துக் கழகங்களும், கட்சிகளும் சரி தொடர்ந்து வஞ்சித்தே வந்துள்ளன. தத்தம் தந்நல குறுகிய தேர்தல் அரசியல் மற்றும் ஒப்போலை [ஓட்டு] வேட்டைக்காகவே தமிழர்களை அக்கட்சிகளும், கழகங்களும் பயன்படுத்திக் கொண்டன. கருநாடகத் தமிழர்களின் உரிமை மீட்பில் இக்கட்சிகளும், கழகத்தினரும் எவ்வகையான அக்கறையும் கொள்ளவில்லை. ஆகவே, கருநாடகத் தமிழ் மக்களின் அரசியல் பகராளி[பிரதிநிதி]யாக எந்த அமைப்பும், கட்சியும் உருவாகாத பேணுவாரற்றச் [நிராதரவான] சூழலே இன்றும் நீடித்து வருகின்றது. எனவே, கருநாடகத் தேசியச் சிறுபான்மைத் தமிழர்களின் அனைத்து உரிமைகளுக்காகவும், மண்ணுரிமைக் காகவும், பண்பாட்டு உரிமைக்காகவும் ஒருமிப்பின்றிப் [சமரசம்] போராடக் கூடிய - ஒரு புதிய முனைப்புடன் செயற்படக் கூடிய அமைப்பொன்றைக் கட்டியமைக்க வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையை முன்னிறுத்திய பணியை நாம் எதிர்கொண்டிருக்கிறோம்.

www.tamilarangam.net

17. கடந்த 30 ஆண்டுகளாகப் படிப்படியாகக் கருநாடக அரசும், கன்னட இனவெறி அமைப்புகளும் தமிழர்களின் மீது கட்டவிழ்த்துவிட்ட வன்முறைத் தாக்குதல்களால் கருநாடகத் தமிழர்கள் மிகுந்த பொருள் இழப்புகளையும், உயிர்இழப்புகளையும் சந்தித்துள்ளனர். தமிழர்கள் ஒன்றுபட்ட ஒரு வலுவான அமைப்பின் கீழ் அமைப்பாகத் திரளாததால், ஒப்பீட்டளவில் அமைப்பாகத் திரண்டு, இனவெறிக்குத் துணைபோகும் அரசு ஆதரவுடன் செயற்பட்டுவரும் கன்னட இனவெறி ஆற்றல்கள், காவல்துறை ஆகியோரின் வெறித்தனமான வன்முறைத் தாக்குதல்களை எதிர்கொள்ளவோ அல்லது தற்காத்துக் கொள்ளவோ தமிழர்களால் இயலவில்லை. இந்தக் கழிவிரக்க நிலை இனிமேலும் தொடர முடியாது என்பதும், கருநாடகத் தமிழர்கள் தங்களின் வாழ்வுரிமைகளைத் தற்காத்துக் கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும், மீட்டமைத்துக் கொள்ளவும் ஒன்றிணைய வேண்டும் – அமைப்பாக வேண்டும் என்பதுமான கட்டாய நிலை தற்பொழுது உருவாகியுள்ளது.

18. கடந்த 30 ஆண்டுகளில் தமிழர்களை ஒன்றுபட்ட அமைப்பாக ஒருங்கிணைக்க முயற்சிகள் நடக்கவில்லையா? எனில், நடைபெற்றுள்ளன. அப்படித் தோன்றிய அமைப்புகள், தோன்றுவதற்கான காரணங்களையும், அவை எதிர்கொண்ட நடைமுறைச் சிக்கல்களையும், போராட்டச் செயற்பாட்டு வாய்ப்பு வரம்புகள், வரலாற்றுப் பட்டறிவுகள் போன்றவற்றை நாம் தொகுத்துக் கொள்வதும், அவற்றிடமிருந்து கற்றுக் கொள்வதும் இன்றியமையாததாகும்.

19. 1981–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் *கருநாடகத் தமிழர் முன்னணி*, ''தன்னுடைய கொள்கைத் திட்டமும், நோக்கங்களும்'' என்ற அறிக்கையுடன், கருநாடகத் தமிழரின் நலனுக்காகவே தோற்றம் கொண்டது. இவ்வறிக்கை, கருநாடகத் தமிழர் சிக்கல்களின் பல படிநிலை வளர்ச்சி(பரிமாணங்)களையும், அன்றைய குறிப்பான சூழல்பற்றியும், ஆழமான ஆய்வுகளுடனும், வலுவான சான்றுகளுடனும், பல அடிப்படையான கோரிக்கைகளுடனும் ஆன செயல் திட்டத்தை முன்வைத்தது. கூட்டங்கள், பேரணிகள், தொலைக் காட்சியில் தமிழ், கோகாக் பரிந்துரைக்கு எதிர்ப்பு, கோலார் தங்கவயலிலும், பெங்களூரிலும் தமிழர் மீது துமுக்கிச் சூடு நடத்திய காவல் துறையையும், அரசையும் எதிர்த்துப் போராடியது எனப் பல வடிவங்களில்

www.tamilarangam.net

தன்னுடைய போராட்ட நிலைகளை வடிவமைத்துக் கொண்டு முன்னணி போராடியது. இப்படியாக 4 ஆண்டுகள் கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தும் கூட கருநாடகத் தமிழர் முன்னணியால் ஓர் இயக்கமாக உருக் கொள்ள இயலவில்லை. பரந்துபட்ட தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் ஆக்கமானதொரு செயல் திட்டமில்லாததாலும், குறைந்த அளவிலான அமைப்பாற்றலும் இல்லாததாலும், பல்வேறு புறக்காரணிகளாலும் கருநாடகத் தமிழர் வரலாறு, மற்றும் சிக்கல் ஆகியவை குறித்த முடுக்கமான ஓர் அறிமுகத் தருக்கத்தை [விவாதத்தை] முன்வைத்துக் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டிச் செல்ல முன்னணியால் இயலாமற் போனது என்றாலும் தமிழர்கள் வாழையடி வாழையாக இங்கு வாழ்ந்து வந்தவர்கள் தாம் என்பதை நிலைநாட்டியது.

20. பெங்களூரில், ஈழத் தமிழர்களுக்குத் துணையாக நடத்தப் பெற்ற போராட்ட நடவடிக்கைகள் கருநாடகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் வாய்ப்புகளைத் தோற்றுவித்தது. 1983-இல் தமிழீழ விடுதலைக்குத் துணைநிற்கும் வகையில் அதற்குரிய செயற்பாடுகளுடன் முதலில் ***'பெங்களூர்த் தமிழர் பேரவை''*** என்று தொடங்கப் பெற்றுப் பின்னர் அதுவே ***''கருநாடகத் தமிழர் பேரவை''***யாகத் தோற்றம் கொண்டது. 1985-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் ***பேரவை*** தன்னுடைய ***கொள்கை விளக்கம் அமைப்பின் நெறிமுறைகள்*** ஆகியவற்றை உருவாக்கியது. பெருமுயற்சியுடனும், கடும் உழைப்புடனும் கருநாடகத்தின் பல மாவட்டங்களிலும் கிளைகள் தொடங்கப் பெற்றுச் செயற்படத் தொடங்கியது. பெரும் எதிர்பார்ப்புகளுடன் செயற்பட்டு ஓரளவு பரவலாக - ஒரு வலுவான இயக்கமாக உருப்பெறும் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. 1991-க்குப் பிறகு தமிழகத்திலும், பெங்களூரிலும் நிலவிய கடுமையான அடக்குமுறைகளாலும், தமிழர் எதிர்ப்பு அரசியல் சூழலாலும் பேரவையின் செயலுக்குத் தடையேற்பட்டது. அத்துடன், அன்றைய புதிய சூழல்கள் தோற்றுவித்த அறைகூவல் [சவால்]களையும், முரண்பாடுகளையும் கணக்கில் கொண்டு அனைத்து நிலைகளிலுமுள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கத் தவறியதும், அடுத்தகட்ட வளர்ச்சிக்குத் தேவையான அமைப்பாற்றல் இல்லாததுமே அதன் செயல்களுக்கு முதன்மைத் தடையாய் அமைந்தது.

21. பெங்களூரில் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் ***பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்,*** கருநாடக மற்றும் இந்திய அரசின்

www.tamilarangam.net

ஒப்பளிப்புடனும் [அங்கீகாரம்], கொடை[நிதி]யுதவியுடனும் பெருமளவில் ஒரு கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கல்வி நிறுவனமாகத் தன்னுடைய வரம்பிட்ட செயற்பாடுகளுடன் செயற்பட்டு வருகிறது.

22. கருநாடகத்தில், தமிழர்களின் ஒன்றுபட்ட அமைப்பாகவும், அரசியல் ஆற்றலாகவும் எந்த அமைப்பும் உருவாகாத சூழ்நிலையில், தமிழர்களின் ஆற்றாமையையும், [ஆதங்கம்], கடந்த முப்பதாண்டுகளாகக் கருக் கொண்டுள்ள முனைப்பான தமிழ் இளைஞர்களின் தமிழ் உணர்வையும், அரசியல் ஆற்றலையும் அறுவடை செய்து கொள்ளும் குறுகிய நோக்கத்துடன் பல புதிய அமைப்புகளும், கட்சிகளும் கூடத் தோன்றின; தோன்றலாம். இவ்வகையான தந்நல - குறுகிய நலன்களைக் கொண்ட ஆற்றல்களை அடையாளங் காண்பதும், எச்சரிக்கையுடன் இருப்பதும், அவர்களைத் தனிமைப் படுத்துவதும் தமிழர் நலனுக்கு இன்றியமையாத் தேவையாகும்.

23. கருநாடக அரசு மற்றும் கன்னட இனவெறி அமைப்புகளின் தொடர்ச்சியான தமிழின எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகளினாலும், ஈழப் போராட்ட துணை நிற்றல் நடவடிக்கைகளினாலும் கருநாடகத்தில் ***நாம் தமிழர்*** எனும் உணர்வை வலுவாக்கிக் கொண்ட நாம் பல்வேறு போராட்டங்கள், அரசியல் மற்றும் கலை - இலக்கிய அமைப்புகளின் வழித் திரட்டிக் கொண்ட செழுமையான பட்டறிவுகளின் பருண்மையான வடிவமாகவும், கருநாடகத் தமிழர் முன்னணி மற்றும் கருநாடகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புகளின் சரியான கூறுகளை உள்வாங்கிக் கொண்ட - அவற்றின் இன்றைய தொடர்ச்சியாகக் கருக் கொண்ட புதிய அரசியல் அமைப்பாற்றல் தான் நம்முடைய ***தமிழினப் பாதுகாப்புக் குழு*** [கருநாடகத் தமிழர் இயக்கம்]வாகும்.

24. சிங்களப் பேரினவெறி பிடித்த இலங்கை அரசுப் படைகள், யாழ்ப்பாணத்தின் மீது தொடுத்த மாந்தத் தன்மையற்ற வன்முறைத் தாக்குதலைக் கண்டிக்கவும், தமிழீழ விடுதலைக்குத் துணையாகக் குரல் கொடுக்கவும் 18.11.95 அன்று ***"தமிழினப் பாதுகாப்புக் குழு"*** தொடங்கப் பெற்றது. அதைத் தொடர்ந்து 9.12.95 அன்று மிகப் பெரிய அளவில் "மக்கள் தொடரிப் [மனிதச் சங்கிலி] போராட்டத்தை நடத்தியது, தமிழினப் பாதுகாப்புக் குழு. அதன் பிறகு

www.tamilarangam.net

25.12.95 அன்று தமிழீழ விடுதலைக்காகக் குரல் கொடுத்தும், இலங்கையின் தமிழின அழிப்புத் தாக்குதலைக் கண்டித்தும் *தமிழின எழுச்சிக் கூட்டம்* மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றது. 1996-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 8-ஆம் நாள் காவிரி நீர்ப் பங்கீட்டுச் சிக்கலின் தொடர்ச்சியாக நடத்தப் பெற்ற கருநாடக முழு அடைப்பின் [பந்த்] போது, மீண்டும் தமிழர்கள் மீது தாக்குதல் நடைபெறாவண்ணம் குடிசைப் பகுதிகள் - புறநகர்ப் பகுதிகள் எனப் பல்வேறு தமிழர் வாழ்பகுதிகளுக்கும் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிட்டு மேற்கொண்டது, தமிழினப் பாதுாப்புக் குழு. 1996-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 18ஆம் நாளைய கருநாடக அரசாணைப்படி, ஆசிரியர் பயிற்சிக் கொள்கையில் கருநாடக அரசின் தமிழர் எதிர்ப்புப் போக்கைக் கண்டித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டி இறுதிவரை போராடி வெற்றி பெற்றது. 5.1.97 அன்று ஈழத் தமிழர்க்குத் துணையாக மாநாட்டை மிகச் சிறப்புடன் நடத்தி உலகத் தமிழரின் கவனத்தை ஈர்த்தது. களரி நாடகக் குழுவினரால் நடத்தப் பெற்ற நாடகங்களுக்குத் துணைநின்றது எனப் பலநிலைகளில் பாடாற்றி வருகிறது, *தமிழினப் பாதுகாப்புக் குழு.*

25. இன்று இதுவரையிலான தமிழர் நலன், பாதுகாப்புப் போராட்ட அரசியலைச் செழுமையான பட்டறிவுகளை - வளர்ச்சி பெற்றுச் செயலணிகளைத் தன்னுடையதாக்கிக் கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கித் *தமிழினப் பாதுகாப்புக் குழு* செல்ல வேண்டி இருக்கிறது. கருநாடகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் நோக்கத்துடன் செயற்படவேண்டிய ஒரு மாபெரும் வரலாற்றுத் தேவையை நடைமுறைப் படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழினப் பாதுகாப்புக் குழு, பெங்களூர்த் தமிழ் மக்களிடத்தில் பரவலான ஒப்பளிப்பையும் [அங்கீகாரத்தையும்], துணைதரவை[ஆதரவை]யும் பெற்றிருக்கிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. கருநாடகத் தமிழர்கள், தங்களின் அனைத்துவகை உரிமைகளின் பாதுகாப்பு உள்ளிட்ட ஒரு வலுவான கருநாடகத் தேசியச் சிறுபான்மை அரசியல் உரிமை இயக்கமாக மலர வேண்டியதின் தேவையை முன்னிறுத்தித் *'தமிழினப் பாதுகாப்புக் குழு'* இனித் தன்னைக் *'கருநாடகத் தமிழர் இயக்கம்'* என வழங்கிச் செயற்பட விழைகிறது.

www.tamilarangam.net

# கருநாடகத் தமிழர் சிக்கலுக்குத் தீர்வு நம் அணுகுமுறை

1. ஒவ்வொரு நாளும் தமிழர்கள் பல்வேறு வகையான தாக்குதல்களுக்கும், வன்முறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் உள்ளாகி வரும் சூழலில், தாக்குற்றோர்[பாதிக்கப் பட்டோர்] முகங்கொடுக்கும் அச்சம், இழப்புகள், இழிவுகள் போன்றவற்றைக் கண்டு மனம் பதைத்துக் கொதித்தெழுந்து தற்காப்புக்காக என்ன செய்வது? எனத் துடிப்பதும், ஆனால் அமைப்பாற்றலும், கூட்டு முனைப்பும் இல்லாமல் - இயலாமையால் துவண்டு போவதும், அதன் தொடர்ச்சியாகத் தங்களைத் தற்காத்துக் கொள்ள இன்றியமையா முறைகளைப் பற்றிச் சிந்திப்பதுமான சூழலும் நிலவி வருகிறது.

2. ஆனால், இது போன்ற பன்னிலை வளர்ச்சிகளைக் கொண்ட அரசியல் சிக்கலுக்குத் தீர்வு, ஒரு நீண்ட கால அரசியல் செயல் திட்டத்தின் கீழ்ச் செயல்படுவதில் தான் அடங்கியுள்ளது. எனவே, கருநாடகம் முழுவதுமுள்ள தமிழர்களை ஓரணியில் அணி சேர்ப்பது என்பது இன்றியமையாததாகும். முதலில், பெருந்திரளான அடிப்படை *உழைக்கும் தமிழ் மக்களை* அமைப்பாக்குதல் இன்றியமையாதது. *நம்முடைய நண்பர்கள் யார்? எதிரிகள் யார்?* என அடையாளங் காணவும், இன்று உலக முழுவதிலும், இந்தியத் துணைக் கண்டத்திலும், கருநாடகத்திலும் மாறிவரும் அரசியல் நிலைமைகள் - தேசிய இனப் போராட்ட வரலாறுகள் பற்றியுமான சீரிய கருத்துப் பரப்பல் தமிழ் மக்களிடையே கொண்டு செல்லப்படுதல் வேண்டும். அவர்களிடமிருந்தே ஒரு வலுவான தலைமையாற்றலையும் கட்டியமைத்தல் வேண்டும். கருநாடகத் தமிழர் இயக்கம் [தமிழினப் பாதுகாப்புக் குழு] அரசியல் தலைமை அளித்தல் வேண்டும்.

3. சிதறிக்கிடக்கும் தமிழர்களையும்,குறிப்பாகத் தமிழிளைஞர்களையும், அமைப்பாக்க ஆங்காங்கே பகுதியளவில் கருநாடகத் தமிழர் இயக்கத்தின் [தமிழினப் பாதுகாப்புக் குழு] கிளைகளைக் கட்டுதல் வேண்டும். தேவையேற்படின், பருண்மையான சூழலுக்கேற்ப வேறு பகுதிவாரி அமைப்புகளையும்

www.tamilarangam.net

கட்டி கருநாடகத் தமிழர் இயக்கத்துடன் [தமிழினப் பாதுகாப்புக் குழு] இணைக்கலாம். தமிழர் சிக்கல், தமிழின உரிமை மீட்பு போன்றவை பற்றிய ஆழமான ஆய்வுகளை - கருத்தியலைப் பயிற்றுவிப்பு இயக்கங்களாக முன்கொண்டு செல்லுதல் வேண்டும். தமிழர்களின் அடிப்படை உரிமைகளை மீட்க அரசுடன் நேரடியாகவும், வழக்கு மன்றங்களின் வழியாகவும் கருத்தியல் போர் ஒன்றைத் தொடுத்தல் வேண்டும். தமிழர் நலனையும், உரிமை மீட்பையும் முன்னிறுத்தும் நாளிதழ் / இதழ் ஒன்றை நடத்துவதற்கான வாய்ப்பை உடனடியாகத் தேடுதல் வேண்டும்.

4. கருநாடக அரசின் அதிகார வகுப்பும், கன்னட வெறி ஆற்றல்களும், காவல் துறையும் நேரடியாகவும் - திட்டமிட்ட வகையிலும் தமிழர் எதிர்ப்புச் செயல்பாடுகளில் - அரசியலில் உணர்வுமிக்க நிலையில் செயல்பட்டு வருகின்றன. இத்தகு சூழலில், நாம், திடும் சினம் [ஆவேசம்] கொள்வதோ, அல்லது நேரடியான வலிவாய்வில் [பலப் பரிட்சை] இறங்குவதோ தற்கொலைக்கு ஒப்பானதே! மாறாகப் பரவலான அக்கறையும், ஒப்படைப்புடன் [அர்ப்பணிப்பு] செயல்படக் கூடிய அமைப்புக் கட்டுப்பாட்டு உணர்வு கொண்ட அமைப்பிற்கான செயல் வீரர்கள் அணியை அணியப் படுத்திக் கொள்வதே இன்றைய உடனடிக் கடமையாகும். கருநாடகத் தமிழர் இயக்கம் [தமிழினப் பாதுகாப்புக் குழு] இதற்குத் தேவையான அனைத்தையும் கடப்பாட்டுடன் மேற்கொள்ளும்.

5. பெங்களூரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் - ஒரு சில வட்டாரங்களில் தமிழர் கன்னடர் உறவு என்பது எப்பொழுதும் தமிழர்களுக்கு அச்சுறுத்தலாகவும், பாதுகாப்பில்லாமலுமே இருந்து வருகிறது. இப்பகுதிகளில் தமிழர்கள் தங்களின் உயிர் - உடைமைகள் போன்றவற்றைக் காத்துக் கொள்ளத் தற்காப்பு அரண்களைப் பகுதிவாரியாக அமைத்துக் கொள்வதும் இன்றியமையாதது. அந்தப் பகுதிகளை உடனே அமைப்பாக்குவதும், நிலவும் சூழல் குறித்துப் பரவலான கருத்துப் பரப்பலை மேற்கொள்வதும் இன்றியமையாததாகும்.

6. கருநாடகத் தமிழர்களாகிய நாம், தேசியச் சிறுபான்மையர் - மொழிச் சிறுபான்மையர் எனும் நிலையில் கருநாடக வரலாற்றில் கருநாடகத்தின் முன்னேற்றத்தில் குறிப்பிடத் தக்க பங்கை ஆற்றி

www.tamilarangam.net

வருபவர்கள் என்ற முறையில் நம்முடைய மொழி, பண்பாடு, பொருளியல், வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கத் தொடர்ந்து போராட வேண்டிய நிலையில் உள்ளோம். இக் காரணத்தால் கருநாடகத்தின் வளங்களைச் சுரண்டிப் பாலைவனமாக்கும் அனைத்து வல்லரசிய பூதங்களுக்கும் எதிரான எல்லா மக்கள் இயக்கங்களோடும் கைக் கோர்க்க வேண்டியதும் இன்றியமையா நம்முடைய கடமைகளில் ஒன்றாகும். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை மற்றும் வாழ்வியல் போராட்டங்களுக்குத் துணையாகப் பங்கேற்க வேண்டுவதும் நம்முடைய கடமையாகும். ஆகவே, கருநாடகத் தமிழரின் மாந்தவுரிமையாம் மண்ணுரிமை முதல் பண்பாட்டுரிமை வரை எந்தவொரு ஒருமிப்புமற்றப் [சமரசமற்ற]போராட்டத்திற்கு அணியமாகும் அதே நிலையில் கருநாடக மக்களின் விடுதலையுணர்வோடு நாம் இணைந்து செயல்படுவதின் வழிதான் நம்முடைய விடுதலையைப் பெற முடியும்.

7. தமிழர் தம் உரிமைகளைப் பலதுறைகளிலும் நிலை நாட்டவும், இழந்த உரிமைகளை மீட்கவும் அந்தந்தத் துறைகளிலும் சிறப்புக் குழுக்களை அமைத்துச் செயற்படுதல் வேண்டும். ஆய்வறிஞர் குழு, வழக்கறிஞர் குழு, கருத்துப் பரப்பல் குழு, வெளியீட்டுக் குழு போன்ற குழுக்களை அமைப்பதோடன்றி - அரசு அதிகார உறுப்புகளுடன் அவ்வப்பொழுது பேச்சாடல் [பேச்சு வார்த்தை] நடத்தித் தற்காப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தமிழர்களின் கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை அரசாங்கத்தை ஏற்கச் செய்யப் பரிந்துரைக் குழுவொன்றையும் கருநாடகத் தமிழர் இயக்கம் [தமிழினப் பாதுகாப்புக் குழு] அவ்வப் பொழுது அமைக்கும்.

## தேர்தல்கள் பற்றி

8. கருநாடகத்தில் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடும் நிகழ்வுப் போக்கில் ஓர் ஒன்றுபட்ட வலுவான அரசியல் ஆற்றலாக மாறியாக வேண்டியது காலத்தின் கட்டாயம். அதன் ஒரு பகுதியாகத் தமிழர்கள் பல்வேறு தேர்தல்களின்போது மேற்கொள்ள வேண்டிய முறை பற்றியும் நிலைபாடு கொள்ளத்தான் வேண்டும். தேர்தலில் பங்கேற்பது பற்றி அவ்வப்பொழுது செயல் நுண்ணுத்தி

www.tamilarangam.net

[தந்திரம்]யின் அடிப்படையில் முடிவு மேற்கொள்ள வேண்டும். ஆனால் தற்பொழுது ஓர் உறுதிவாய்ந்த அமைப்பாக உருவாக வேண்டியிருப்பதால் தேர்தலில் கருநாடகத் தமிழர் இயக்கம் [தமிழினப் பாதுகாப்புக் குழு] பங்கேற்காது.

9. ஆகவே, இன்றுள்ள கருநாடகச் சூழலில், குறிப்பாகப் பெங்களூர் – தங்கவயல் உட்பட கருநாடகத்தில் அனைத்துத் தமிழர் வாழ்பகுதிகளிலும் ஒரு முழுமையான விரிந்த – குடியாட்சி உரிமைகளை – மாந்த உரிமைகளை – தேசியச் சிறுபான்மை மொழி மக்களின் உரிமைகளை முன்னிறுத்திக் கருநாடகம் தழுவிய ஒரு தமிழர் இயக்கத்தைக் கட்டியமைக்க வேண்டும். அத்துடன் கீழ்க்காணும் கோரிக்கைகளுக்கான உடனடி மற்றும் நீண்டகால செயல் திட்டங்களை வகுத்துச் செயல்படுவதோடு – இவை குறித்த உறுதியான – தெளிவான [தீர்க்கமான]கருத்துப் பரப்பலையும் மேற்கொள்ளவேண்டும். பல தளங்களிலும் அமைப்புகளைக் கட்டி முனைப்பான அமைப்பாளர்களின் – செயல்வீரர்களின் அணியை உருவாக்கிக் களப்பணியை விரிவு படுத்தவும் வேண்டும். கருநாடகத் தமிழர்கள் தங்களின் எதிர்கால வாழ்வியல் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க ஒரு நீண்டகாலப் பார்வையுடன் செயல்படவேண்டுவதும் உடனடிக் கடமையாகும்.

> *தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்*
> *தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு*
>
> – பாவேந்தர்

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு !
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே !"

– பாவேந்தர்

www.tamilarangam.net

# செயல் திட்டத்திற்கான அடிப்படை கோரிக்கைகள்

## கருநாடக அரசிடம்

1. கருநாடகத் தமிழர்களின் மீது நடத்தப்படும் அனைத்துவகை தாக்குதல்களுக்கும், உரிமைப் பறிப்புகளுக்கும் தளமாக அமைவது கருநாடக அரசும், கன்னட மொழி இனவெறி ஆற்றல்களும் தமிழர்பால் கொண்டிருக்கும் தமிழர் எதிர்ப்பு அரசியலேயாகும். ஆகவே, அவற்றைக் கைவிட்டு வரலாற்று மற்றும் நிகழ்கால உண்மைகளின் அடிப்படையில், கருநாடகத் தமிழர்கள் கருநாடகத்தின் தேசியச் சிறுபான்மையர் என்பதை ஏற்கவும், ஒப்பளிக்கவும் [அங்கீகரிக்கவும்] வேண்டும். கருநாடக அரசின் அனைத்துத் துறைகளிலும் தமிழர்களுக்குச் சமவுரிமை நிலையை ஒப்பளிக்க [அங்கீகரிக்க] வேண்டும்.

2. மொழிச் சிறுபான்மையர் ஆணையரின் 20-வது அறிக்கை தந்துள்ள சிறுபான்மையர்க்கான பாதுகாப்புகளைக் கருநாடக அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

தமிழ்ப்பள்ளிகளை மூடிவருவதை விடுத்து மீண்டும் தமிழ்ப்பள்ளிகளைத் திறந்து ஆசிரியர்களை அமர்த்த வேண்டும்.

4. சிறுபான்மையர் நடத்தும் பள்ளிகளைக் கருநாடக அரசு ஓரவஞ்சனையுடன் நடத்தி வருகின்றது. இத்தகைய குடியாட்சி எதிர்ப்புப் போக்கைக் கருநாடக அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்.

5. தாய்மொழிக் கல்வியுரிமை என்பது மிகவும் அடிப்படையான குடியாட்சி உரிமையாகும். ஆனால், கருநாடக அரசு இதற்கு முற்றிலும் எதிராகச் செயல்பட்டு வருகிறது. இப்போக்கை உடனடியாக நிறுத்த வேண்டும். தமிழ்ப்பள்ளிகளை மூடிவிடுவதும், பள்ளி-கல்லூரிகளில் தமிழ்ப் பாடப் பிரிவை எடுத்து விடுவதும், பல்கலைக் கழகங்களில் தமிழ்த் துறையை மீண்டும் அமைக்காதிருப்பதும், தமிழர்களுக்குச் சமமான கல்வி வாய்ப்பு மறுக்கப் படுவதும், புறக்கணிக்கப்படுவதுமான போக்குகள் உடனே நிறுத்தப்பட வேண்டும். தமிழர்களுக்குத் தமிழ்வழிக் கல்விக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

www.tamilarangam.net

6. கருநாடகத்தில் தமிழர்கள் எங்கெல்லாம் 15 விழுக்காட்டினர் வாழ்ந்து வருகிறார்களோ அங்கெல்லாம் அனைத்து அரசுத் துறைகளிலும் (வழக்குமன்றம் உட்பட) தமிழ் துணையாட்சி மொழி ஆக்கப் படல் வேண்டும். அரசுச் சட்டங்களையும், நெறிமுறைகளையும் தமிழிலும் வெளியிடல் வேண்டும். அரசே அதற்கான தமிழாக்கக் குழுக்களை அமைத்தல் வேண்டும். ஒப்போலையர் (வாக்காளர்) பட்டியலையும் தமிழில் வெளியிடல் வேண்டும்.

7. கருநாடகத்தில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப் படுவதையும், புறக்கணிக்கப் படுவதையும் நிறுத்திட அரசு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வேலை வாய்ப்பு அலுவலகங்களில் தமிழர்களின் பெயர்களைப் பதிவு செய்ய மறுப்பதும், சூழ்ச்சியால் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களின் வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். தமிழர்களின் மக்கள் தொகை விழுக்காட்டிற்கேற்ப வேலை வாய்ப்பில் இடம் ஒதுக்கப்படல் வேண்டும். தமிழர்களின் எண்ணிக்கைக் கேற்பக் கருநாடகக் காவல்துறையில் உரிய இடங்கள் அளிக்கப் பெறல் வேண்டும். தமிழர் பெரும்பான்மையராக வாழ்கின்ற பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் பெரும்பான்மையரான தமிழ்க் காவல் படைஞரையே அமர்த்தம் செய்தல் வேண்டும்.

8. பெங்களூர்ப் பெருநகராட்சியில் இன்னும் சேர்க்கப் படாது தவிர்த்துவரும் தமிழர்வாழ் பகுதிகளைப் பெருநகர்ப் பகுதியில் உடனடியாகச் சேர்த்தல் வேண்டும்.

9. தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகள் புறக்கணிக்கப் படுவதென்பது உடனே நிறுத்தப் படல் வேண்டும். அப்பகுதிகளிலும் குடிநீர், சாலை, பேருந்து போக்குவரத்து, முறையான கழிப்பிடம், மின் இணைப்பு, தெருவிளக்கு, வடிகால், மருந்தகம், பொதுத் துப்புரவு போன்ற மிகவும் அடிப்படையான ஏந்துகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.

10. தமிழர்கள் பெரும்பான்மையராக வாழ்கின்ற தேர்தல் தொகுதிகளின் ஒப்போலையர் (வாக்காளர்) பட்டியலிலிருந்து தமிழர் பெயர்களை விலக்கித் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டும்

www.tamilarangam.net

சூழ்ச்சி நிறுத்தப் பெறுதல் வேண்டும். அத் தேர்தல் தொகுதிகளைத் திட்டமிட்டுச் சுக்கு நூறாக உடைத்துத் தமிழர்களையும், முசுலிம்களையும் தங்களுடைய கோரிக்கைகளை முன் வைக்கும் தனி வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்து ***தேர்ந்தெடுக்கப் பெறுவதைத் தடுக்கும் சூழ்ச்சியை*** நிறுத்தக் கருநாடக அரசு உடனே நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11. தமிழர்கள் பெரும்பான்மையராக வாழும் பெங்களூரில், தொலைக் காட்சி நிலையம் தனியாக அமைத்த பின்னரும் கூடத் தமிழ் நிகழ்ச்சிகள் இடம் பெறவில்லை. இப்போக்கு உடனே கைவிடப்படுதல் வேண்டும். தமிழ், உருது போன்ற சிறுபான்மை மொழியினர்க்கும் வானொலி, தொலைக் காட்சி உட்பட அனைத்துத் ***தொடர்புக் கருவிகளிலும்*** [சாதனங்கள்] உரிய இடம் அளிக்கப் பெறுதல் வேண்டும்.

12. ***கோகாக் அறிக்கை***யின் பரிந்துரைகளின்படிச் சிறுபான்மையரின் தாய்மொழிக் கல்வியுரிமை பறிக்கப்பட்டு, வழக்காடிய பின் கருநாடக உயர்வழக்கு [நீதி] மன்றம் அந்த மொழியுரிமைப் பறிப்பு அரசாணைக்கு எதிராக 1989-இல் தீர்ப்பளித்தது. ஆனாலும் கருநாடக அரசு இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பாடமொழிக் கொள்கையைத் திருத்தியமைத்துத் தமிழர் உள்ளிட்ட மற்றச் சிறுபான்மையரின் மொழியுரிமையை மீட்டளிக்காமல் வஞ்சனை செய்து வருகிறது. கருநாடக அரசு இந்தச் சட்ட மீறலையும், உயர்வழக்கு மன்றத் தீர்ப்பை மதிக்காத போக்கையும் உடனே கைவிட்டு விட்டுச் சிறுபான்மையினரும் வஞ்சனையின்றித் தாய்மொழிக் கல்வியைப் பெறுவதற்கான - சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருதல் வேண்டும்.

13. காவிரி நீர்ப் பங்கீட்டுச் சிக்கலைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டு தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பெற்ற வன்முறைத் தாக்குதலால் உயிரிழந்த - உடைமை இழந்த - தாக்குதலுக்குள்ளான தமிழ்க் குடும்பங்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

www.tamilarangam.net

# கருநாடகத் தமிழர்களுக்கான முழக்கங்கள்

1. கருநாடகத் தமிழர்களாகிய நாம், நம்முடைய இன்னல்களுக்கும் இழிவுகளுக்கும் முடிவுகட்ட, இழந்த உரிமைகளை மீட்டமைக்க ஓர் அரசியல் ஆற்றலாய் உருத்திரள்வோம்; விழிப்புணர்வு, விரிவான கருத்துப் பரப்பல் ஆகியவற்றின் வழி அமைப்பாய் அணி திரளவும், நம்முடைய கோரிக்கைகளை முன்னிறுத்திக் கருநாடக அரசை வலியுறுத்திப் போராடவும் அணியமாவோம்.

2. கருநாடகத் தமிழர்களாகிய நாம், ஒற்றுமையுடனும், தன் மானத்துடனும், துணிவுடனும், உயிர் உடைமைகள் போன்றவை அழிக்கப்படாது பாதுகாப்புடன் வாழக் கருநாடகத் தமிழர் அரசியலுடன் நம்மை இணைத்துக் கொள்ளவும், தமிழ்நாட்டுக் கழக அரசியல் கட்சிகளின் நீட்சியாக நாம் செயல்படுவதை உடனே நிறுத்தவும், பிற தமிழர் விரோதக் கட்சிகளைப் புறக்கணிக்கவும் துணிவு கொள்வோம். கருநாடகத்தின் வாழ்விலும், வளர்ச்சியிலும் தான் நம்முடைய வாழ்வும், வளர்ச்சியும் அடங்கியுள்ளன என்பதை நிலைநிறுத்துவோம்.

3. கருநாடகத்தில் உள்நாட்டு ஏதிலி (அகதி)யராக்கப் பட்டுள்ள பெரும்பான்மைத் தமிழராகிய நாம் நம்முடைய வாழ்வுரிமைகளுக் காகவும், அடிப்படைக் குடியாட்சி உரிமைகளுக்காகவும், இருண்ட நம் எதிர் காலத்தை மாற்றியமைக்கவும் போராடுவதே இன்றைய நம்முடைய வரலாற்றுக் கடமை என்பதை உணர்ந்து *களச் செயலுக்கு* அணியமாவோம்.

4. கருநாடக அரசின் ***தமிழர் எதிர்ப்பு*** அரசியலால் நம் குழந்தைகளின் தமிழ்க் கல்வியுரிமை பறிக்கப்பட்ட சூழலில் ***நாம் தமிழர்*** என்னும் உணர்வும், தமிழ்க் கல்வியறிவும் இல்லாதொழிந்து வருவதைத் தடுக்கும் வகையில், நம்குழந்தைகளுக்குத் தாய்மொழியுணர்வை யும், கருநாடகத் தமிழர் வரலாற்றையும், தமிழர் தம் பண்பாட்டு - இலக்கிய மரபை அறிமுகப் படுத்துவதையும், தமிழ் மக்களுக்கான ***கருத்தியலை மறு உருவாக்கம்*** செய்வதையும் உடனடிக் கடமையாக மேற்கொள்வோம்.

5. தமிழர்தம் பண்பாட்டிலான குடியாட்சி மரபுகளை வளர்த்துக் கேடான வழக்கங்களையும், மேற்கத்திய வல்லரசியச் சீரழிவுகளையும்

www.tamilarangam.net

கைவிடச் சொல்லி அவர்தம் *பண்பாட்டு நிலையை உயர்த்தச்* செயற்படுவோம்.

6. தமிழர்களின் பொதுவான பொருளியல் நிலை மிகவும் கீழான அடிநிலையில் இருப்பதால் அவர்தம் பொருளியல் வளர்ச்சிக்கான உதவிகளையும், கூட்டுச் செயற்பாடுகளையும், முறையான வேலை வாய்ப்பகம், சொந்தத் தனித் தொழில் வாய்ப்புகள் போன்ற ஆக்க வகையிலான செயல்பாடுகளையும் வளர்க்க உறுதுணையாக நிற்போம்.

7. தமிழர் எதிர்ப்புக் கலவரங்களின் போது, தமிழர்களின் உயிர்களும், உடைமைகளும், குடிசைகளும் இனியும் தாக்கப் படாமலும், கொளுத்தி அழிக்கப் படாமலும் பாதுகாக்கவும், அடி-உதை போன்ற பிற வன்முறைகளுக்குத் தமிழர்கள் உள்ளாவதைத் தடுக்கவும் ஒரு கட்டுக் கோப்பான இளைஞர்களின் அமைப்பாற்றலை உருவாக்கச் செயற்படுவோம்.

8. கருநாடகத் தமிழர் இயக்கத்தை ஒரு வலுவான மக்கள் இயக்கமாகக் கட்டியமைக்க மாணவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், அறிஞர்கள், மருத்துவர்கள், தொழிலாளர்கள், உழவர்கள், எழுத்தாளர்கள், தாளிகையாளர்கள் [பத்திரிக்கை] கலை இலக்கியப் படைப்பாளிகள் - ஆர்வலர்கள், போன்ற அனைத்துப் பிரிவினரிடமும் உள்ளமைப்புகளைக் கட்டியமைத்துக் கருநாடகத்தில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ் ஆர்வலர்களின் - அறிஞர்களின் ஒற்றுமையுணர்வையும், ஆக்கப் பணிகளையும் ஒன்றிணைக்கும் கடமையை மேற்கொள்வோம்.

## 9. தமிழ் இளைஞர்களிடம் விழிப்புணர்வு

இன்றைய தமிழர் நிலை குறித்தும், தமிழர்கள் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள் குறித்தும், சரியான தமிழர் அரசியல் குறித்தும் தமிழ் இளைஞர்களிடத்தில் விழிப்புணர்வுக்கான தருக்கத்தை உருவாக்குவோம். கருநாடகத்தில் தமிழர் நிலை குறித்த அனைத்துப் படிநிலை வளர்ச்சிகளையும் இளைஞர்களுக்கு விளக்குவோம். சிதறிக்கிடக்கும் தமிழ் இளைஞர்களின் ஆற்றல்களைக் கருநாடகத் தமிழரின் விடிவிற்கு ஒன்றிணைத்து வலுவூட்டுவோம். இவ்வாறாக இளைஞர்களை வென்றெடுக்க

அவர்களிடத்தில் வீர விளையாட்டுக்களில் பயிற்சி அளிப்போம். அரசியல், பொருளியல், பண்பாடு போன்ற தளங்களில் ஆழ்ந்த பயிற்சியின் வழி இளைஞர்களிடத்தில் தெளிவுண்டாக்குவோம். போதைப் பொருள், திரைப்படச் சீரழிவு, கையூட்டு அரசியல், சுரண்டலாளர் அதிகாரம் போன்றவற்றைத் தகர்க்க இளைஞர்களை அணிதிரட்டிச் செயற்பட கருநாடகத் தமிழர் இயக்கத்தின் வழித் தளம் அமைத்துப் போராடுவோம்.

## 10. பெண்களின் சிக்கல்

உலகம் முழுவதும் பெண்களின் வாழ்வு கடைநிலையானதாகவே இருந்து வருகிறது. பெண்கள் மீதான சுரண்டலும், அடக்கு முறையும், பாலியல் வன்முறையும் கணக்கில் அடங்காதவை. பெண்களைப் போதைப் பொருளாகவும், நுகர்வுப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும், வேலைப் பிரிவில் சமையல் அறைக்கு மட்டுமே உரியவளாகவும், பிள்ளைகளைப் பெற்றுத் தருகின்ற பொறிகளாகவுமே (மிஷின்) பார்க்கின்ற இழிவான போக்கே நின்று நிலைத்து நீடித்து வருகின்றது. மதவியல் போக்குகளால் தமிழ்ப் பெண்கள் இன்னும் கூடுதலான பார்ப்பனீய நிலக்கிழமைத் தன்மையான கொடுமைகளைச் சுமந்து கொண்டு உழன்று வருகின்றனர். வேலைக்குச் செல்லும் பெண்களின் இன்னல்களோ அளப்பரியவை. பணியிடங்களில் பல்லாற்றானும் தொல்லையேற்று வீடு திரும்பும் பெண்களுக்கு வீட்டிலும் எண்ணற்ற இன்னல்கள் காத்திருக்கின்றன. குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் பெண்கள் சரியான கழிப்பிட ஏந்தும், குளிக்க மறைப்பிடமின்றியும், குடிநீர் ஏந்துகள் இன்றியும், கல்வி என்றால் என்னவென்றே அறியாமலும் வாழ்ந்து வருகிறார்கள். கல்வியறிவு கிடைக்கப் பெறாமல் பெண்கள் திட்டமிட்டே வஞ்சிக்கப் படுகிறார்கள். இவ்வாறான பெண்கள் மீதான் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவோம். எவ்வகையான குமுக விடுதலைக்கும் பெண்களின் பங்களிப்பு என்பது மிகவும் இன்றியமையாதது. பெண்களின் பங்களிப்பின்றி எந்தப் போராட்டமும் வெற்றி பெறாது. பெண் விடுதலை என்கின்ற பெயரால் முன்வைக்கப் பெறும் அனைத்து வல்லரசியப் பண்பியலையும் எதிர்த்துப் போராடப் பெண்களை அணி திரட்டுவோம்.

www.tamilarangam.net

## 11. கலை, இலக்கியம்

கலை–இலக்கியம் என்பது, மாந்த குல வரலாறு நெடுக இருவேறு வகுப்பு(வர்க்கம்)களின் வெளிப்பாடுகளாகவே இருந்து வந்துள்ளது. ஒன்று ஆளுமையரின் கலையாக – இலக்கியமாக மக்களை அடிமைப் படுத்தவும், அடக்கியொடுக்கி நசுக்கவும் பயன்பட்டு வந்துள்ளது. மற்றொன்று அவ்வண்ணம் அடிமைப் படுத்தப்பட்டு ஒடுக்குண்டோரின் போர்க்குரலாகவும், விடுதலை இலக்கியமாகவும் இருந்து வந்துள்ளது. இவ்வாறாக, ஆளுமையரின் அரசியலுக்குத் துணையாகவும், அடக்கி ஒடுக்கப்பட்டோரின் போர்க் குரலாகவும் கலை இலக்கியம் இருந்து வந்துள்ளது.

எனவே இசை, பாடல், நாடகம், கதை, கவிதை, கட்டுரை, இதழ், சின்னத்திரை (வீடியோ), திரைப்படம் போன்ற கலை வடிவங்களின் வழியாகக் குமுகத்தில் நிலவும் சீரழிவுகள், வல்லாட்சியரின் கேடுகள் ஆகியவற்றைக் களையவும், தமிழின எதிர்ப்பாளர்களின் முகமூடிகளைக் கிழித்தெறியவும், தமிழின வளர்ச்சிக்கும், வளத்திற்கும் ஒளிசேர்க்கக் கூடியதாகவும் கலை, இலக்கியம் அமையப் பாடாற்றுவோம். இவ்வகையான கலை, இலக்கியக் குழுவைக் கட்டியமைத்துச் செயற்பட நம் ஆற்றல்களைப் பயன்படுத்துவோம்.

## 12. மதச் சிக்கல்

மாந்தன் வாழ்க்கைப் போராட்டத்தில் இயற்கைச் சீற்றங்களுக்குத் தப்பித் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இயற்கையின் வெளிப்படையான – மறைமுகமான ஆற்றலைத் தேடினான். அவன் தேடுதல் பல திசைகளிலும், கோணங்களிலும் பயணப்பட்டன. அதன் விளைவாகப் பல நம்பிக்கைகள் – வழிபாடுகள் எனப் பலவாறாகத் தோற்றம் கொண்டன. மாந்தப் பண்பாட்டின், அரசியலின், பொருளியலின் வளர்ச்சியும், நம்பிக்கைகளும், வழிபாடுகளும் மெய்ம்மவியலாகவும் (தத்துவங்களாகவும்) கோட்பாடுகளாகவும் மாறி நிறுவனங்களாக இறுகிவிட்டன; இறுகிய நிறுவனங்கள் தனிமாந்த நம்பிக்கைகளையும், வழிபாடுகளையும் தத்தம் தன்மைகளுக்குப் பலியாக்கின. இன்றைய நிலையில் தனி மாந்த இறைநம்பிக்கைகளும், இறை வழிபாடுகளும் மதத் தத்துவக் கோட்பாட்டு நிறுவனங்களும் வேறு வேறு எனப் பிரிக்க முடியாத வகையில் ஒன்று கலக்கப்பட்டுச் சிக்கலுக்குள்ளாகி நிற்கின்றன.

www.tamilarangam.net

பார்ப்பன இந்து மதவெறிக் குடுமியாட்டத்தால் *மதமோதல்கள்* உருவாக்கப்பட்டு மக்கள் ஒற்றுமையுடன் வாழமுடியவில்லை; அரத்தக் களறி ஏற்பட்டு மக்கள் நாளும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். மதவெறியால் **அரத்தப் (இரத்தப்) பசி** எடுத்து அலையும் பெரும்பான்மை மதத்தினரையும், தங்களுடைய உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடிவரும் சிறுபான்மை மதத்தினரையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கவியலாது. மதம் என்பதே மக்களைப் பிளவுபடுத்தி அதில் ஒரு பிரிவினர் குளிர்காய்வதாகவே உள்ளது. எனவே, பகுத்தறிவு சார்ந்த அறிவியல் வழிப்பட்ட கருத்துகளைப் பரப்புவோம்.

## 13. சாதியம்

கருநாடகத்தில் தமிழர்களின் வாழ்நிலை கொடுமையானதாகவும், இழிவானதாகவும் இருந்து வருகின்றது. ஒவ்வொரு மணித்துளியும் எங்கும் தமிழர் மொழிவழியாக, இனவழியாகத் தாக்கப் படுவதும், இழிவுபடுத்தப் படுவதும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது மாக வாழ்ந்து வருகிறோம். இவ் இழிநிலைகளைத் தகர்க்க வேண்டிய தமிழர்களே இங்குச் *சாதியால் பிளவுண்டுக் கிடப்பது கண்கூடு.* இது தமிழரின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும். நம்மீதான கொடுமைகளை எதிர்த்துப் போராடும் வகையில் நாம் தமிழர்களாய் ஒன்றிணையச் *சாதி தடைக்கல்லாய்* இருந்து வருகிறது. இத் தடைக்கல்லை உடைத்தெறிய கருநாடகத் தமிழர்களின் உரிமைப் போராட்டங்களினூடே சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவிப் பதும், ஆதிக்கச் சாதி வெறியை எதிர்த்துப் போராடுவதும் சாதியொழிப்புப் பற்றிய கருத்துப் பரப்பலை மேற்கொள்வதும் நம்முடைய இன்றியமையாக் கடமையாகும். ஏனெனில், தமிழர்களை ஒன்றிணைக்காமல் நம் போராட்டங்களில் நாம் வெல்லமுடியாது.

சாதி மறுப்புத் திருமணங்கள் செய்து கொண்டவர்களில் பலர், இக் குமுகத்தில் ஒதுக்கப் பட்டு உளவியல் நிலையிலும், வாழ்வியல் நிலையிலும் தாக்குற்றுத் தடுமாறி இருக்கிறார்கள். அவர்தம் உளவியல் நிலைகளை அறிந்து அவர்கட்கு வேண்டிய அனைத்துத் துணை நிலைகளையும் நாம் மேற்கொள்வோம். சாதி வேற்றுமைகளைத் துறந்து தமிழர்களாய் ஒன்றிணைந்து நம் உரிமைகளுக்காகப் பாடாற்றுவோம்.

www.tamilarangam.net

# 14. கோலார் தங்கச் சுரங்கம்

கோலார் தங்க வயல், தொன்று தொட்டு தமிழர்கள் வாழ்ந்து வரும் மண். கோலார் தங்கச் சுரங்கத்தில் தம்முடைய தங்கச் சுரண்டலை முடித்துக் கொண்டு ஆங்கில வந்தேறிகள் புறப்பட்ட பின்னர், அந்த ஆளுமைப் பொறுப்பை எடுத்துக் கொண்ட கருநாடக அரசு, போதிய ஆற்றலும், முதலீடும் இன்றித் திக்கித் திணறியதால் இந்திய அரசே நேரடியாகப் பொறுப்பெடுத்து நடத்தத் தொடங்கியது. அதிகாரிகளின் ஊழல் பெருக்கத்தால் தங்கச் சுரங்கங்களின் ஊதியம் [இலாபம்] பெருகவே இல்லை. இதனால், கோலார் தங்கச் சுரங்கங்களையே மூடிவிட முடிவெடுத்துப் பெருத்த எதிர்ப்புகளுக் கிடையிலும் அவற்றை மூடிவிட முனைப்புடன் செயற்பட்டு வருகிறது இந்திய அரசு. இதனால் அச் சுரங்கங்களில் தங்களின் உயிரையே பணயம் வைத்து உழைத்து எஞ்சி நிற்கும் சுரங்கத் தொழிலாளர்களின் வருங்காலம் பெரிய கேள்விக் குரியதாகி விட்டது. பாரத மண்வாரித் தொழிலகத்திலும் தமிழரின் எண்ணிக்கைக்கேற்ப வேலை வாய்ப்புகள் வழங்காமல் வஞ்சித்து விட்டனர். தங்கவயல் தொழிலாளர்களை, வாழ்விக்க *மாற்றுத் தொழில்களை* அமைப்பது என்னும் திட்டமும் பொய்த்துவிட்டது. எனவே, இந்நிலையில் தங்களின் வருங்காலம் குறித்துக் கவலை கொண்டும், ஏதும் செய்யவியலா நிலையில் எரிமலையாகக் குமுறிக் கொண்டும் உழன்று வருகின்றனர் தங்கவயல் தொழிலாளர்கள். தங்கவயல் தொழிலாளர்கள் அனைவரும் தமிழர்கள் என்பதாலேயே இத்தகைய தமிழர் எதிர்ப்புப் போக்குகளைக் கடைப்பிடித்து வரும் இந்திய – கருநாடக அரசுகளை எதிர்த்துப் போராடுவோம். **கோலார் தங்கச் சுரங்கங்களை மூடாதே !** பாரத மண்வாரித் தொழிலகத்தில் *தமிழர்களுக்குப் பெருமளவில் வேலை கொடு* என்று தங்கவயல் தொல்தமிழர்களின் உரிமை மீட்சிக்காய் உரத்து முழங்குவோம்.

*ஒன்றுபடுவோம் ! உடைத்தெறிவோம் !! வென்றெழுவோம் !!!*

நாள் : 31-10-1998

www.tamilarangam.net

# வீர வணக்கம்

வீர வணக்கம் ! வீர வணக்கம் !
ஈக மறவர்க்கு வீர வணக்கம் !

மொழியினம் நாடென மூச்சிழந்தோர்க்கும்
உரிமைப் போரில் உயிர் ஈந்தோர்க்கும் (வீர)

பூத்தனர் புகழொடு பொன்வயல் தமிழர்கள் !
தாய்மொழி காக்கத் தன்னுயிர் ஈந்தனர் !
குண்டுராவ் ஆட்சியில் எந்தமிழ் இளைஞர்கள்
குண்டடிச் சூட்டை மார்பில் தாங்கினர் !

குற்றம் அறியாக் குழவிகள் முதியோர்
குடும்பமே கொத்தாய் அழிக்கப் பட்டனர் !
குடிசை எரிந்தது ! உடைமை அழிந்தது !
மடிந்து தமிழர்கள் மண்ணில் சாய்ந்தனர் !

வாழப் பிறந்தவர் பாதியில் மாண்டனர் !
வஞ்சினம் நெஞ்சினில் கனலாய் மணக்குது !
கடந்ததை எண்ணிக் கண்ணீர் விடாமல்
கடமையை ஆற்றிடும் இளைஞரை வாழ்த்துவோம் !

புதைகுழி மூடிய விதைகள் முளைக்கும் !
புகையும் மூட்டம் நெருப்பாய் மூளும் !
உழைக்கும் தமிழர்கள் உரிமை முழக்கம்
உலகினை ஒப்பிட வைக்கும் ஓர்நாள் !

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடனென்று தமிழ்த்தொண்டில் அமிழ்வாய்!

தமிழுக்கு நீசெய்யுந் தொண்டு! – நின் (தமி)
பகைமீது பாய்ச்சிய குண்டு!

தமிழில்நீ புலமை பெற வேண்டும்! – அது
தமிழ்பெறத் தமிழரைத் தூண்டும்!
தமிழிலே யேபேச வேண்டும்! – அது
தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும்! (தமி)

தமிழ்பேசு; தமிழிலே பாடு! – நீ
தமிழினிற் பாடியே ஆடு
தமிழ்ப்பாட்டை யேகாதில் போடு – தமிழ்
தப்பினால் உன்காதை மூடு (தமி)

வணிக விளம்பரப் பலகை – அதில்
வண்டமிழி லாவிடில் கைவை!
காண்கநீ திருமண அழைப்பைப் – பிற
கலந்திருந் தாலதைப் புய்! புய்! புய்! (தமி)

பொருள்களைத் தமிழினில் அழைப்பாய்! – பிற
பொருந்தாப் பெயர்களை ஒழிப்பாய்!
தெருப்பெய ரில்தமிழே இழைப்பாய் ! – அதில்
சீறுவார் மடமையை ஒழிப்பாய்! (தமி)

தமிழிலே வழிபாடு வேண்டி – பின்
தளர்ந்தனன் முன்னமோர் ஆண்டி!
அமைவாக அவனையும் தூண்டி நீ
அறஞ்செய்க சோம்பலைத் தாண்டி! (தமி)

உரைசெய்ய, நூலெழுத வந்தோர் – அவற்றுள்
வடசொல்லை ஏன்தாம் கலந்தார்?
சரிசெய்ய ஆனதை நீபார்! – அவர்
தடுத்தால் தொடங்குவாய் மொழிப்போர்! (தமி)

வடமொழிப் புகழ்ந்திடும் தமிழ்வாய் – எதிர்
வரக்காணில் காறிநீ உமிழ்வாய்!
கடனென்று தமிழ்த்தொண்டில் அமிழ்வாய்! ஒரு
கடல்போன்ற புகழ்கொண்டு கமழ்வாய்! (தமி)

- *பாவேந்தர்*

நன்கொடை : உரு. 5/